10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 227 சனிக்கிழமை ஜனவரி 06 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## வைரஸ் காய்ச்சலால் முதியவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஜன. 06

இன்புளுவன்சா வைரஸ் காய்ச்சலால் முல்லைத்தீவில் நேற்றும் ஒருவர் உயிரிழந்தார்.

குமுழமுனையைச் சேர்ந்த எம். பாக்கியம் (வயது -74) என்ற வயோதிபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 3 வாரங்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தநிலையிலேயே அவர் மரணமானார்.

இவருடன் இன்புளுவன்சா காய்ச்சலால் முல்லைத்தீவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இரு மாதங்களில் 11 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை இன்புளுவன்சா நோய்த் தாக்கத்தால் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 06▶

## விக்னேஸ்வரன் - பிரிட்டன் எம்.பிக்கள் சந்திப்பை தடுத்தாரா சுமந்திரன் எம்.பி.?

யாழ்ப்பாணம், ஜன. 06

இலங்கை வந்த பிரிட்டனின் சர்வகட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் குழுவை, முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்திக்க விடாது நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தடுத்தார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வந்த பிரிட்டனின் சர்வ கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்தது.

நல்லூர் கந்தசுவாமி கோவில், யாழ். கோட்டை, யாழ். பொதுநூலகம் போன்றவற்றை சென்று பார்வையிட்ட அக்குழுவினர், வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, இராணுவத்தின் யாழ். தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி ஆகியோரையும் சந்தித்துப் பேசினர்.

ஆனால் இந்தக் குழுவினர் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்திக்கவில்லை. அவரை சந்திப்பது தொடர்பிலும் அவர்கள் திட்டமிடவில்லை எனக் கூறப்படுகின்றது. முன்னதாக கொழும்பில் அவர்கள் நாடாளுமன்ற 06▶

## 17,273 பேர் யாழில் தபால் மூலம் வாக்களிக்க முடியும்

யாழ்ப்பாணம், ஜன. 06

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க யாழ். மாவட்டத்தில் 17 ஆயிரத்து 273 பேர் தகுதி பெற்றுள்ளனர் என யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில், தபால் மூலம் வாக்களிக்க யாழ். மாவட்ட உதவித் 06▶

## மடு தேவாலயம் அருகே முளைக்கிறார் புத்தர்?

### பிரஜைகள் குழு சாடல்




மன்னார், ஜனவரி 06

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மடு தேவாலயம் அருகே புத்தர் சிலையை நிறுவி பௌத்த ஆலயம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதனை உடன் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மன்னாரைச் சேர்ந்த இரு பிரஜைகள் குழுக்கள் வடக்கு கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரனுக்கு கடிதம் அனுப்பியுள்ளன.

மன்னார் மடு மாதா தேவாலயத்தின் நுழைவாயிலின் அருகே இராணுவத்தினர் 06▶

## வெளியாகட்டும் பதிலளிக்கிறேன்



கொழும்பு, ஜன. 06

பிணைமுறிகள் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை வெளியானதும் அதற்குச் சரியான பதிலளிப்பேன் என்று முன்னாள் நிதி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய பிணைமுறிகள் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக் 06▶

## வேட்பாளர் அலுவலகம் 31 இற்குள் மூட வேண்டும்

கொழும்பு, ஜன. 06

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் அலுவலகங்கள் அனைத்தும் இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அகற்றப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த உத்தரவை மீறி நடத்தப்படும் வேட்பாளர்களின் அலுவலகங்கள் மற்றும் சுவரொட்டிகள் அனைத்தை 06▶

## புலிகளுக்கு நிதி சேகரிப்பு சுவிஸில் 13 பேருக்கு வழக்கு

ஜெனிவா, ஜன. 06

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு நிதி சேகரித்து வழங்கினர் என்ற குற்றச்சாட்டில் 13 பேருக்கு எதிராக சுவிற்சர்லாந்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

சுவிற்சர்லாந்து, ஜேர்மன் நாடுகளில் வசித்த இலங்கையர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இவர்களில் உலகத் தமிழ் ஒருங்கமைப்புக் குழுவைச் சேர்ந்தவரும் அவரின் உதவியாளரும் அடங்குவர். இவர்கள் அனைவரும் நாளை மறுதினம் திங்கட்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் எனத் தெரிகிறது.

கைது செய்யப்பட்டவர்கள், 1999 - 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விடுதலைப் புலிக 06▶

## பூநகரி விபத்தில் ஒருவர் பலி பொலிஸார் - மக்கள் முறுகல்

கிளிநொச்சி, ஜன. 06

பூநகரியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் உயிரிழந்தார். சிங்கராசா கேதீஸ்வரன் (வயது 32) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

மரணமான நபர் மோட்டர் சைக்கிளில் பயணித்தபோது மாடு ஒன்றுடன் மோதியபோது லொறியுடன் அடியுண்டு உயிரிழந்தார் எனக் கூறப்படுகின்றது. 06▶





உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES

Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

# குமார் பொன்னம்பலத்துக்கு யாழில் நேற்று நினைவேந்தல்







யாழ்ப்பாணம், ஜன.06

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் முன்னாள் தலைவர் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 18ஆம் ஆண்டு நினைவு தினம் யாழ்ப்பாணம் கந்தர்மடத்திலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

அவரது புதல்வரும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையில் இந்த நினைவு நிகழ்வு இடம்பெற்றது.

சிறந்த சட்டவாளரான குமார் பொன்னம்பலம் இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் பாடுபட்டார். அரசியல் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டு தடுப்பிலிருந்த தமிழ் இளைஞர்கள் சார்பில் நீதிமன்றங்களில் வாதாடினார்.

தமிழ் தேசியக் கருத்துக்களைத் துணிவாக வெளியிட்டு வந்தார். இதனால், இனவாதிகள் இவரை வெறுத்தனர். இதன் உச்சக் கட்டமாக குமார் பொன்னம்பலம் 2000ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் திகதி கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண வீதியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தமிழ் மக்களுக்கான குரலாக கடைசிவரை செயற்பட்டதால் மாமனிதர் என்னும் மதிப்பளிப்பை குமார் பொன்னம்பலத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வழங்கியிருந்தனர். (அ)

# நீதியை நிலைநாட்டுவோம்
## ரணில் உறுதி



கொழும்பு, ஜன.06

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அரசாங்கம் நாட்டில் சமூக நீதியை நிலைநாட்ட உறுதி கொண்டுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் அபிவிருத்தியை முக்கியமான அம்சமாகக் கருத முடியுமென்று அலரிமாளிகையில் நேற்று முன் தினம் இடம் பெற்ற மூவாயிரம் பாடசாலைகளுக்கு நடமாடும் ஆய்வு கூடங்களைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பிலான விளக்கமளிப்பு கூட்டத்தில் பிரதமர் இவ்வாறு உரையாற்றினார்.

"இன்றைய உலகம் தொழில்நுட்ப புரட்சியைச் சந்தித்துள்ளது. இந்தப் புரட்சி இலங்கையிலும் கால்பதித்துள்ளது. தகவல் தொழில்நுட்பப் புரட்சி வழியாக முன்னேறிச் செல்ல சகல பிள்ளைகளுக்கும் விஞ்ஞான அறிவைப் பெற்றுக் கொடுப்பது அவசியம். இதற்காக விஞ்ஞான உபகரணங்களை வழங்கி விஞ்ஞான ஆசிரியர்களைப் பயிற்றுவித்து ஆங்கில அறிவை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம்" என்று பிரதமர் சுட்டிக்காட்டினார். (அ)

# யால பூங்காவுக்குள் போக 600 ஜீப்களுக்கு அனுமதி


கொழும்பு, ஜன.06

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் மகிந்த அமரவீரவின் கோரிக்கைக்கு அமைவாக யால தேசியப் பூங்காவுக்குள் அனுமதிக்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கையை 600 ஆக அதிகரிக்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

சமீபத்திய விடுமுறை காலப்பகுதியில் பெரும் எண்ணிக்கையிலான உள்நாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் யால பூங்காவைப் பார்வையிடுவதற்கு வருகை தந்திருந்தனர்.

தற்பொழுது நாளாந்தம் 500 ஜீப் வாகனங்களே உள்நுழைவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதனால் சுற்றுலாப்பயணிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

இதன் காரணமாக கடற்றொழில் நீரியல் வளங்கல் அமைச்சரும் மகாவலி இராஜாங்க அமைச்சருமான மகிந்த அமரவீர, ஜனாதிபதி மற்றும் பிரதமர் வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேராவிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.




# ஒத்துழைக்கத் தயார்



கொழும்பு, ஜன.06

பிணைமுறி விவகாரத்தில் ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்து கொள்வதற்காக, நாடாளுமன்றத்தில் புதிய சட்டமொன்றைக் கொண்டுவந்தால், அதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தாம் தயாரென, மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, இவ் விவகாரத்தில் ஜனாதிபதி முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தின் போது ஏற்பட்ட மாபெரும் ஊழல் மோசடி தொடர்பிலும், கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டுமென்றும், பிமல் ரத்நாயக்க எம்.பி மேலும் குறிப்பிட்டார். (அ)

# முன்னாள் தூதுவருக்கு மீண்டும் பிடியாணை

கொழும்பு, ஜன.06

அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரமசூரியவை உடனடியாகக் கைது செய்வதற்கான பிடியாணை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் நேற்றுப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராகச் அவர் செயற்பட்ட காலப்பகுதியில் தூதுவர் காரியாலயத்துக்காக கட்டடம் ஒன்றைக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதன் போது 3 லட்சத்து 20 ஆயிரம் அமெரிக்க டொலருக்கும் அதிகமான தொகையை முறையற்ற வகையில் கையாண்டதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டு சிறிது காலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவருக்கு பிணை வழங்கப்பட்டதுடன், மருத்துவத் தேவைக்காக வெளிநாடு செல்வதற்கான அனுமதியும் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருந்து.

8 வாரங்கள் வெளிநாடு செல்வதற்கு கோட்டை நீதவான் லங்கா ஜெயரத்னவினால் இவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும் நிபந்தனையின் படி உரிய தினத்தில் மீண்டும் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகததன் காரணமாக கடந்த நவம்பர் மாதம் 17ஆம் திகதி அவருக்கு எதிராக பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன், இது தொடர்பான வழக்கு நேற்றைய தினம் வரையில் ஒத்தி வைக்கப்பட்டது.

அதன்படி வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதும், அவர் ஆஜராகாததால், மீண்டும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# மக்காவிலிருந்து தங்கம் கடத்தியவர் சிக்கினார்

கொழும்பு, ஜன.06

சவுதி அரேபியாவின் மக்கா நகரில் இருந்து இலங்கைக்கு ஒருதொகை தங்கம் கடத்தி வந்தவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கல்முனைப் பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய ஒருவரே நேற்றுமுன் தினம் மாலை இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கொண்டுவந்த பயணப் பொதியில் இருந்து 814.16 கிராம் நிறையுடைய தங்கம் இதன்போது கண்டுபிடிக்கப்பட்டது. அவற்றின் பெறுமதி 4,472,380 ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

தங்க வளையல்கள், மோதிரங்கள் மற்றும் பென்டன்கள் உள்ளிட்ட தங்க ஆபரணங்கள் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கம் அரசுடமையாக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபருக்கு 100,000 ரூபா தண்டமும் அறவிடப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன கூறினார். (அ)

# பன்றி இறைச்சியுடன் ஒருவர் கைதானார்

கொழும்பு, ஜன.06

வவுனியா - நெளுக்குளம் பகுதியில் 10 கிலோகிராம் பன்றி இறைச்சியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று முன் தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாரதிபுரம் பகுதியைச் சேர்ந்த 33 வயதான நபரொருவரே இவ்வாறு பன்றி இறைச்சியுடன் கைது செய்யப்பட்டவராவார்..

இந்த நிலையில் விசாரணைகளின் பின் அவரை வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

எதிரொலி
Ethiroli
சனி, 06 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

## நம்பத்தான் போகின்றோமா இனியும்?

"போரின்போது கைது செய்யப்பட்டவர்களில் இதுவரை 40 முதல் 50 சதவீதம் பேர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். சுமார் 20 ஆயிரம் பேரை காணவில்லை என புகார் வந்துள்ளது" இவ்வாறு இந்திய ஊடகமொன்றுக்குப் பேட்டியளித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

அந்தப் பேட்டியில் எல்லோரும் இந்த வார்த்தைகளை மிகச் சாதாரணமாகவே கடந்து போயிருப்பர். ஆனால் அந்த இரு வார்த்தைகளும் போருக்குப் பின்னர் எங்கள் தமிழ்க் கட்சிகள் எவ்வளவு தூரம் மக்களின் பிரச்சினைகள் குறித்து அக்கறை காட்டி வருகின்றன என்பதைப் புரிந்து கொள்ள மிக நன்றாகவே உதவுகின்றன. அப்படியென்ன தான் இந்த வார்த்தைகளில் மக்கள் நலனில் அக்கறையில்லாத் தன்மை தெரிகின்றது? எனச் சிலர் கேட்கலாம். இருக்கிறது. திரும்பவும் அந்த வார்த்தைகளை வாசியுங்கள். கைது செய்யப்பட்டு, புனர்வாழ்வின் பின் சமூகமயப்படுத்தப்பட்டவர்கள் எத்தனை பேர் என்று சொல்லமுடியாமல், 40 முதல் 50 வீதமானோர் என்று ஒரு கைக்கணக்கில் சொல்லியிருக்கிறார் பொறுப்புவாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருக்கும் இரா.சம்பந்தன். அதேபோன்றே 'சுமார் 2 ஆயிரம் பேரைக் காணவில்லை' என்று அடுத்த தரவிலும் ஒரு குருட்டாம் போக்கான தரவை, 'சுமார்' என்ற வார்த்தையோடு இணைத்து அடித்து விட்டிருக்கிறார்.

இதே பதிலை ஜே.வி.பியினர் சொல்லிருந்தால், அவர்கள் சொல்கின்ற கணத்தில் இருக்கும் மிகத்துல்லியமான எண்ணிக்கையையே சொல்லியிருப்பார்கள். இப்படி ஒரு கைக்கணக்கில் '40 முதல் 50 வீதம் என்றோ, 'சுமார் 20 ஆயிரம் பேர்' என்றோ கதையளந்திருக்க மாட்டார்கள்.

சம்பந்தன் குறிப்பிட்ட இரு விடயங்களுமே இன்னும் மக்கள் மத்தியில் இருக்கும் 'எரியும் பிரச்சினைகள்'. அந்த எரியும் பிரச்சினைகள் பற்றிய துல்லியமான தரவுகள் இருந்தாலேயே அது பற்றி அரசுக்குத் தெரிவித்து, அடுத்த கட்ட நகர்வை மேற்கொள்ள முடியும். ஆனால் தமிழ் அரசியல் கட்சிகளிடம் இது பற்றிய அக்கறை கிடையாது. காணாமல் போனோருக்கான போராட்டங்கள் நடைபெறும் போதும், தங்களை விடுவிக்குமாறு சிறைக்கைதிகள் உண்ணாவிரதம் இருக்கும் போதும், ஒரு நடை எட்டிப் பார்ப்பதோடு, தங்கள் கடமை முடிந்துவிட்டதாக இந்த அரசியல்வாதிகள் நினைக்கிறார்கள். அதற்கப்பால் ஒரு துரும்பைத்தானும் அசைக்க அவர்கள் நினைப்பது கிடையாது.

போருக்குப் பின்னரும் மேட்டுக்குடி அரசியலிலேயே நம்முடைய கட்சிகள் மூழ்கியிருக்கின்றன. ஆனால் உண்மையில் மக்களிடம் இறங்கிச் சென்று, அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து, துல்லியமான புள்ளிவிபரங்களைப் பெற்று அதனை மீள மீள அரசுக்கும், பொது அமைப்புகளுக்கும், சர்வதேசத்துக்கும் தெரியப்படுத்தி, அழுத்தம் கொடுத்து, அவற்றுக்கு உரிய தீர்ப்பைப் பெற்றுக் கொடுக்க முயன்றிருக்க வேண்டும். ஆனால் இங்கு அரசியல் கட்சிகள் தாமாக மக்கள் பிரச்சினைகளுக்காகப் போராடுவதில்லை. மக்களே தன்னெழுச்சியாகப் போராடும் போதே தலையைக் காட்டுகின்றன. இவ்வாறு பட்டும் படாமல் மக்கள் பிரச்சினைகளை அணுகுவதால் தான், ஒரு நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் சம்பந்தனுக்கு கூட, எத்தனைபேர் காணாமல் போயுள்ளனர், எத்தனை பேர் சிறையில் உள்ளனர், எவ்வளவு தொகையானவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்பன போன்ற தகவல்கள் சரிவரத் தெரியாமல், ஒரு பருமட்டான , வாய்க்கு வந்த எண்ணிக்கையையோ அல்லது வீதத்தையோ சொல்கிறார்கள். இப்படி விட்டேத்தித்தனமான அரசியல்வாதிகளால் தான் எங்களுக்கு அரசியல் தீர்வும், விடிவும் கிடைக்கப் போகின்றது என இனியும் நம்பத்தான் போகின்றோமா?

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# பெண்ணைக் கடத்தவுமில்லை ஒப்பமிடாமல் தடுக்கவுமில்லை

## சிவமோகன் எம்.பி தன்னிலை விளக்கம்



வவுனியா, ஜன.06

" ஒரு பெண்ணைக் கடத்தி வைத்து நாம் மிரட்டியதாகச் சொல்லப்படுவது அப்பட்டமான பொய். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வெற்றியைத் தட்டிவிடுவதற்காக செய்யப்பட்ட காரியமே இது" என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் பெண் ஒருவர் கடத்தப்பட்டமை தொடர்பாக தன்னிலை விளக்கத்தினை அளிப்பதற்காக ஊடகவியலாளர் சந்திப்பினை வவுனியாவில் ஏற்பாடு செய்திருந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையில் தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு இருந்த 100 வீத வெற்றிக்கு சேறுபூசுவதற்காக வங்குரோத்து அரசியல்வாதிகளின் செயற்பாடாகவே இதனை பார்க்கின்றேன். யாழ்ப்பாணம் கட்சி அலுவலகத்தில் பெயர்கள் இறுதி செய்யப்பட்ட பின்னர் என்னிடம் வேட்புமனு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதன் போது வேட்பாளர்களிடம் ஒப்பம் பெறுவதும், அதனை உரியவர்களிடம் முகவர் ஊடாக தேர்தல் திணைக்களத்தில் ஒப்படைப்பதுவுமே எனது பணியாக இருந்தது.

அந்த வகையில் சகல வேட்பாளர்களுக்கும் அறிவித்தல் வழங்கப்பட்டு குறிப்பிட்ட நாள் அனைத்து வேட்பளார்களிடமும் ஒப்பம் பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதில் 23 பேர் ஒப்பமிட வரவேண்டியவர்களாக இருந்தும் 21 பேர் சமூகமளித்திருந்தனர்.

ஆனால் புளொட் சார்பாகப் போட்டியிட வேண்டிய வேட்பாளர் அங்கு வரவில்லை. அதன் பின்னர் நான் நேரடியாக புளொட்டின் பிரதேசப் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு அந்தப் பெண்ணை அனுப்புமாறு கோரியிருந்தேன். அதற்கு அவர்களும் அனுப்புவதாக தெரிவித்திருந்தார்கள்.

ஆனால் ஊடக அறிவிப்பில் எனது அலுவலகத்தில் மிரட்டல் செய்யப்பட்டதாக தகவல்கள் வந்தன. ஆனால் அது பொய்யான ஊடகத்தகவல். அலுவலகத்தில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் வைத்தே அந்தப் பெண்ணுடன் சிலர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அங்கு ஏதோ ஒரு சம்பவம் நடந்து கொண்டிருந்தது.

ஆகவே அந்தப் பிரதேச புளொட் தலைமையின் வேண்டுகோளுக்கு இணங்கவே சம்பந்தப்பட்ட இடத்திற்கு நான் சென்றிருந்தேன். அதன் போது ஒப்பமிடுமாறு குறித்த பெண்ணிடம் நான் நேரடியாகவே கூறியிருந்தேன். நீங்கள் ஒப்பமிட்டால் இந்த பிரச்சினை தீர்ந்துவிடும் நீங்கள் ஒப்பமிட்டு செல்லலாம் எனக் கூறியிருந்தேன்.

அப்போது அந்த பெண் "புளொட்டின் வற்புறுத்தலாலேயே நான் இங்கு வரவேண்டியிருந்தது. எனக்கு இதில் ஒப்பமிட சம்மதமில்லை. என்னை வற்புறுத்தவேண்டாம். அதை சொல்லி விட்டு செல்லவே நான் வந்தேன் ஒப்பமிட வரவில்லை "எனக் கூறினார்.

அதன் பின்னர் தான் வேட்பாளராக இல்லாமல் போனதற்கு நானே காரணம் என அவர் சொல்லி வருகின்றார். உண்மையில் அந்தப் பெண் அங்கு வராமையும் ஒப்பமிடாமையுமே அவர் வேட்பாளராக முடியாமைக்குக் காரணமாகும். இதற்கு அனைத்து வேட்பாளர்களும் சாட்சியாகவுள்ளனர். இவ்விடயம் புதுக்குடியிருப்பு கிராமத்தில் இடம்பெற்ற விடயம். ஆனால் அப்பெண் தனது கிராமத்திற்கு சென்றதன் பின்னர் நடந்ததாகச் சில விடயங்கள் கூறப்படுகின்றன. அதைப் பற்றி நான் எதையும் கூற விரும்பவில்லை. அதற்கும் எமக்கு எந்தத் தொடர்பும் இல்லை. எனவே இப் பொய் வாக்குமூலத்தினை ஊடகங்கள் ஊதிப் பெருப்பித்து புதுக்குடியிருப்பில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வெற்றியைத் தட்டிவிடுவதற்காக செய்யப்பட்ட காரியமாகவே இதனை பார்கின்றேன்.

இது மாத்திரமின்றி புதுக்குடியிருப்பு மண் விடுதலைப்புலிகள் இறுதிவரை தங்கள் கைப்பிடியில் வைத்திருந்த மண். இந்திய இராணுவத்தை தவிர எந்த இராணுவமும் விடுதலைப்புலிகள் இல்லாமல் போகும் வரை சென்றதில்லை. எனவே புளொட் அமைப்புக்கு அங்கு வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் சிர்மங்கள் இருந்திருக்கலாம். அதற்காக அவர்கள் வற்புறுத்தியதாக நான் கூறவில்லை' என்று விளக்கமளித்தார். (அ)

## ரணிலுக்கு எதிராகப் பிரேரணை

கொழும்பு, ஜன.06

மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிப்பதற்கு கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளதாக விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பொரளையில் அமைந்துள்ள என் .எம் பெரேரா நிலையத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.(அ)

# குற்றவாளியான விஜயகாந்துடன் ஈ.பி.டி.பியை தொடர்புபடுத்தாதீர்

யாழ்ப்பாணம், ஜன.06

"குற்றவாளியாக நீதிமன்றில் அறிவிக்கப்பட்டுள்ள விஜயகாந்துடன், எமது கட்சியின் பெயரை இணைத்துச் செய்தி வெளியிடும் ஊடகங்கள் தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கு முறையிட்டுள்ளோம்" என ஈ.பி.டி.பி. கட்சி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த கட்சி நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

"சட்டவிரோதமான செயற்பாடுகளையும் சமூகவிரோத செயற்பாடுகளையும் மேற்கொண்டு வந்தமையால் கட்சியிலிருந்து சுமார் 7 வருடங்களுக்கு முன்னர் வெளியேற்றப்பட்டவர் சுந்தர் சிங் விஜயகாந்த். அவர் வெளியேற்றப்பட்ட தினத்தன்றே அவரை கட்சியிலிருந்து நீக்கப்பட்ட செய்தியை எமது கட்சி பகிரங்கமாக ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தியிருந்தது.

அதன் பின்னர் முற்போக்கு தமிழ் தேசியக் கட்சியின் தலைவராக இருக்கும் நிலையில் அவரை தொடர்ந்தும் ஈ.பி.டி.பி.யின் முன்னாள் உறுப்பினர் என்று ஊடகங்களில் வெளிப்படுத்துவதானது எமது கட்சியின் நற்பெயருக்கு சேறுபூசும் செயற்பாடாகவே கருதுகின்றோம்.

கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னரான காலத்தில் அவர் முற்போக்கு தமிழ் தேசியக் கட்சி என்ற கட்சி ஒன்றை உருவாக்கியிருந்ததுடன் அமைச்சர் ராஜித சேனரத்னவின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளராகவும் இருந்துவந்த நிலையில் அவரை கோப்பாயில்நடைபெற்ற நகைக் கொள்ளை ஒன்றில் குற்றவாளியாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

அத்துடன் தற்போது நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாநகரசபை வேட்பாளராகவும் சுந்தர்சிங் விஜயகாந்த் உள்ள நிலையில் அவர் மீதான அவதூறுகள் சுமத்தப்படும் சந்தர்ப்பங்களில் அவரைத் தொடர்ந்தும் ஈ.பி.டி.பி.யின் முன்னாள் உறுப்பினர் என்று ஊடகங்களில் வெளிப்படுத்துவதானது எமது கட்சியின் மீது மீண்டும் சேறுபூசும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவே கருதுகின்றோம். இச்செயற்பாடானது ஊடக தர்மங்களுக்கு முரணாக உள்ளதுடன் கண்டனத்துக்கும் உரியதொன்றாகும். இது தொடர்பான முறைப்பாட்டை நாம் தேர்தல் ஆணையாளருக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஈ.பி.டி.பிக்கான வெற்றியை மக்கள் உறுதி செய்துள்ள நிலையில் அந்த வெற்றியை தடுக்கும் நோக்கத்தோடு இத்தகைய அவதூறுகளையும் சேறு பூசல்களையும் செய்யும் பணியில் சில ஊடகங்கள் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது"- என்றுள்ளது. (அ)

## இன்று நாளும் கோளும்

06.01.2018 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 22 ஆம் நாள்
பஞ்சமி பகல் 11.26 மணி வரை | மகம் 08.08 வரை | சித்தயோகம்
இராகுகாலம் 09.00 - 10.30 | சுபநேரம் மு.ப. 07.30 - 08.30 | எமகண்டம் மு.ப. 01.30 - 03.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலாபம் | உதவி | நட்பு | பகை | ஆர்வம் | ஜெயம் | புகழ் | பயம் | அமைதி | யோகம் | போட்டி | பயம் |

# தபால் வாக்களிப்புக்கு 560,000 பேர் தகுதி

கொழும்பு, ஜன.06

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்துள்ளவர்களில் 560,000 பேரின் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனவெனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதேவேளை, "தபால் மூலம் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல், எதிர்வரும் 8ஆம் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்படும். அதன்பின்னர், தபால் வாக்களிப்புக்கான பொதிகள், தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்படும்" என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சமன் ரத்னாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதியன்று இடம்பெறவிருக்கின்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கான தபால் மூல வாக்குப்பதிவு, எதிர்வரும் 25 மற்றும் 26ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# பரிசோதகரைத் தாக்கியோர் கைது

மட்டக்களப்பு, ஜன.06

மட்டக்களப்பு காத்தான்குடி பகுதியில் டெங்குச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவர் தாக்கப்பட்டமை தொடர்பில் இருவர் காத்தான்குடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் காத்தான்குடியில் விசேட டெங்கு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது பொதுச்சுகாதார பரிசோதகர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளான பொதுச் சுகாதார பரிசோதகர் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தாக்குதல் சம்பவம் தொடர்பில் காத்தான்குடிப் பொலிஸார் இருவரை கைதுசெய்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (அ)

# மைத்திரியோடு உடன்படும் ஹர்ஷ

கொழும்பு, ஜன.06

மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் தொடர்பில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்த கருத்துகளுடன் தான் உடன்படுவதாகப், பிரதியமைச்சர் பேராசிரியர் ஹர்ஷ டீ சில்வா தெரிவித்துள்ளார்.

"திருட்டுச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு, கட்சி பேதமில்லை.
ஏதாவதொரு கட்சியைச் சார்ந்தவர்களாகவே இவர்கள் இருக்கின்றனர்.
பிணைமுறி விவகாரத்தில், அரசியல் கட்சி என்ற ரீதியில் பார்க்காமல், தனிப்பட்ட நபர் என்ற ரீதியில் விரலை நீட்டுவதே உசிதமானது. அயினும் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து வருத்தமாக உள்ளது" எனவும், பிரதியமைச்சர் மேலும் கூறியுள்ளார். (அ)



# இடியும் நிலையில் மண்டபம்

வடமராட்சி, ஜன.06

கரவெட்டி கிழக்கு காட்டுப்புலம் பகுதியில் உள்ள சிவனேசன் பொது நோக்கு மண்டபத்தின் முற்பகுதி வளைவு உடைந்துவிழும் நிலையில் உள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். குறித்த மண்டபத்தைப் புனரமைப்பதற்கு உரியவர்கள் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (அ-11)

# 5614 மனித உரிமை மீறல்கள்

கடந்த 2017 ஆம் ஆண்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் 5,614 மனித உரிமை மீறல்கள் கிடைக்கபெற்றுள் எதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இந்த முறைப்பாடுகளுள் அதிகமானவை தடுப்புக் காவலில் இருக்கும்போது முன்னெடுக்கப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலானவை. சுமார் 1,174 முறைப்பாடுகள் இத்தகையவையே. இதன்படி 249 முறைப்பாடுகள் சித்திரவதைகளை அடிப்படையாகக் கொண்டது (பிரதானமாக பொலிஸ்), 171 முறைப்பாடுகள் துன்புறுத்தல்கள் (வடக்கில் புலனாய்வு அதிகாரிகள் பொதுமக்களைத் துன்புறுத்தல்), 323 முறைப்பாடுகள் அச்சுறுத்தல்கள் (குறிப்பாக பொலிஸிடமிருந்து), 298 முறைப்பாடுகள் பலவந்தமாக கைது செய்து தடுத்து வைத்தல் ஆகியன தொடர்பானவை" என்று ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி தீப்பிக்கா உடகம தெரிவித்துள்ளார். (அ)

# மன்னார் ஆயருடன் நேற்று பொது அமைப்புகள் சந்திப்பு

கொழும்பு, ஜன.06

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் பேரருட் கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோவுக்கும் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய பிரதி நிதிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை 10 மணியளவில் மன்னார் ஆயர் இல்லத்தில் விசேட சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது.




மன்னார் மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் ஆயர் இல்லம் சென்ற பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் பேரருட் கலாநிதி பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோவுடன் சுமார் 30 நிமிடங்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

குறித்த கலந்துரையாடலினை தொடர்ந்து கருத்துத் தெரிவித்த மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன்,

மன்னார் மாவட்டத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட ஆயரைச் சந்தித்து மன்னார் மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பாகவும், கடந்த காலத்தில் இருந்த மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப்ஆண்டகை முன்னெடுத்துச் சென்ற தமிழ்த் தேசியப் பணிகளையும், மன்னார் மக்களின் அடிப்படைப் பணிகளையும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஆயர் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற நிலைப்பாட்டை தெரிவித்திருந்தோம்.

மேலும் மன்னார் மக்களினுடைய அடிப்படை பிரச்சினைகள் சம்மந்தமாகவும், அடக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் புதிய ஆயருக்குத் தெரியப்படுத்தினோம்.

எங்கள் கருத்துக்களை அவர் ஏற்றுக்கொண்டார். மேலும் தான் அவ்வாறு செயற்படுத்துவதாகவும் உறுதியளித்துள்ளார்" எனத் தெரிவித்தார். (அ)



# குப்பைகளைப் பிரித்து போடுக தொட்டிகளில்!

வடமராட்சி, ஜன.06

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையினால், கழிவுகளைச் சேகரிக்கும் தொட்டிகள் நெல்லியடி நகரப் பகுதிகளில் நேற்று முதல் வைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் குப்பைகளைத் தரம் பிரித்து, பொலித்தீன் கழிவுகளை ஒரு பகுதியாகவும், போத்தல்களை ஒரு பகுதியாகவும், குப்பைகளை ஒரு பகுதியாகவும் அவற்றுக்கு உரிய தொட்டிகளில் கொட்டுமாறு பிரதேச சபையின் செயலாளர் வினோராஜும் கரவெட்டி வைத்திய அதிகாரி சுதோக்குமாரும் மக்களைக் கோரியுள்ளனர். (அ-11)



# அனுபவிக்கிறதுக்கும் பலன் வேணும். சனி குழப்பப்பிடாது

மழை இல்லை. ஆனால் பனிதான் வாட்டி எடுக்கிது. எப்பிடி வேளைக்குப் படுத்தாலும் காலமை 6–7 மணிக்குத்தான் எழும்பக் கூடியதாகக் கிடக்கு. அதாலை ஒழுங்க கெட்டுப்போச்சுது. தோட்ட வேலையளாலை ஆரும் நேரத்துக்குப் பேப்பர் கடைக்கு வாறேல்லை. நேரஞ் செண்டால் முதலி பேப்பரோடை வீட்டுக்கு வருவன். பேப்பரை வாசிக்கிறது, சாப்பிடுறது, படுக்கிறது. அவ்வளவுதான்.

மத்திய வங்கீன்ரை பிணை முறிப் பிரச்சினை தான் எல்லா பேப்பரிலையும் முக்கியமான விசியமாப் போட்டுக் கிடக்கு. அதிலையும் முந்தி அமைச்சரா இருந்த ரவி கருணநாயக்காவை குற்றவாளி எண்டு சொல்லினம். பிரதமரையும் குறை சொல்லினம். அதோடை மத்திய வங்கி ஆளுநரா இருந்த மகேந்திரனையும் பிழை விட்டிட்டார் எண்டும் சொல்லினம். அதோடை, தான் வாளை வீசப்போறன். படுறவைக்குப் படட்டும். எனக்குத் தெரியாது. எண்டு ஜனதிபதி வேறை வேட்டியை எடுத்து சண்டிக்கட்டுக் கட்டிக் கொண்டு நிக்கிறார். பிரதமர் தலைமையிலான அரசாங்கம் வீட்டை போகும் எண்டும் கதைக்கினம். இப்ப இருக்கிற அந்த அரசியல் நெருக்கடிக்கை உது வேறை ஒரு பிரச்சிரனையும் கிளம்பியிருக்கு. சேடம் இழுத்த மாதிரிக் கன நாளாக் கிடந்து இழுத்து, இழுத்து ஒரு மாதிரி "பொன்னியின் செல்வன்" நாவல் மாதிரிக் கட்டுக் கட்டா ஒரு அறிக்கை வந்திருக்கு. உதை ஜனாதிபதி வாசிக்கவே ஒரு வருசம் செல்லும்போலை கிடக்கு. அதுக்குள்ளை அது சம்பந்தப்பட்ட கள்ளர் எல்லாம் ஒண்டில் ஓடி ஒழிப்பங்கள். இல்லாட்டில் அது சம்பந்தமான பைலுகளைக் களவாப் பொறுக்கி எரிப்பங்கள். உதுதான் நடக்கும். வேறை ஒண்டும் நடக்காது.

இப்ப எல்லா மட்டங்களிலையும் உதைப்பற்றித்தான் பேச்சாம். அதாலை எங்கடை சம்பந்தர் ஐயாவும் தன்ரை பங்குக்கு அதைப் பற்றி என்ன சொல்லி இருக்கிறார் தெரியுமே?

சர்ச்சைக்குரிய பிணைமுறிகள் விற்பனை சம்பந்தமா வந்த அறிக்கையின் படி அதை உரிய அதிகார பீடங்களுக்கு ஜனாதிபதி அனுப்பிக் கெதியா நடவடிக்கை எடுக்க வேணும். அதோடை கடந்த காலங்களிலை பொதுச் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தவையளையும், ஊழல் செய்த ஆக்களையும், மோசடி செய்தவையளையும் சட்டத்துக்கு முன்னாலை நிப்பாட்டி உரிய தண்டனை வாங்கிக் குடுக்க வேணும். இதை நாங்கள் எதிர்க் கட்சி எண்ட வகையிலை மேற்பார்வை செய்வம். இந்த நாட்டிலை பொதுச் சொத்துக்களை முறையற்ற தனமா கையாடல் செய்ய ஆருக்கும் உரிமை இல்லை. அதுக்கு ஆருக்கும் அங்கீகாரம் கிடையாது. நீதி நிலைநாட்டப்பட வேணும். நாங்கள் எப்பவும் நீதியின்ரை பக்கந்தான் நிப்பம் எண்டு மனுசன் மூச்சுவிடாமல் சொல்லி இருக்கிறார்.

கேக்கச் சந்தோஷமாக் கிடக்கு. ஆனால் உதுக்கை எங்கடை எம்பிமாரும் இல்லையோ எண்டு முதலி கேக்கிறான். போன கிழமைக்கு முந்தின கிழமைதானே மகிந்தாவும், பெடியும் சம்பந்தனைப் பாத்து சுகம் விசாரிச்சவை ஆஸ்பத்திரியிலை. அப்ப ஏதோ நல்லவிதமா அரசியல் கதைச்சதாத்தானே பேப்பரிலை வந்தது. பிறகேன் மகிந்தாவுக்கு நெஞ்சு நோகிற மாதிரி சம்பந்தன் ஐயா கதைக்க வேணும். பிணை முறி அறிக்கை பற்றிக் கதைக்கிறதெண்டால் அதைப் பற்றி மட்டுந்தான் கதைக்க வேணும். அதை விட்டிட்டு கொஞ்சம் அங்காலை அரக்கி நிண்டு மகிந்தாவையும் கைது செய்ய வேணும் எண்ட மாதிரி ஜனாதிபதியோடை கதைக்கப்பிடாது. உது கூடாத காரியம். மகிந்தா காசெடுத்து என்ன மற்றைவையளைப்போலை பாங்கிலையே போட்டு வைச்சிருக்கிறார். அவர் கன வியாபாரத்திலை முதலிட்டிருக்கிறார். இலங்கையிலை மாத்திரமில்லை, உலகமெல்லாம் வியாபாரத்தைத் துவங்கி எத்தினை சனத்துக்கு வேலை குடுத்திருக்கிறார்.

பிறகும் அவர் ஜனதிபதியா வந்திருந்தால் எத்தினை மசாஜ் கிளப், எத்தினை சூதாட்ட மையங்கள், எத்தினை விதம் விதமான விடுதியள் எண்டு துவக்கியிருப்பர். அதுவும் இன்ரநஷனல் ஸ்ராண்டட்டிலை. எங்களுக்கு அதுக்கு அதிஷ்டம் இல்லாமல் போட்டுது. உது தான் பிறக்கேக்கை பொசிப்போடை பிறக்க வேணும் எண்டு சொல்லுறது. அனுபவிக்கிறதுக்குச் சாதகமும் நல்லா இருக்க வேணுமெல்லே? அவருக்குப் பிறக்கேக்கை சுக்கிரன் உச்சம். அதாலை அவருக்கு எல்லாத்திலையும் உச்சம். ஆனால் சனிதான் இடைக்கிடை குறுக்கை பாத்திட்டார்?

- வில்லங்கம் விநாசி

# ஊடகங்கள் சரியான வகையில் செயற்படுமாறு அறிவுறுத்து

கொழும்பு, ஜன.06

தேர்தல் அறிவுறுத்தல்களை உரிய வகையில் பின்பற்றும் வகையில் அனைத்து ஊடக நிறுவனங்களும் செயற்பட வேண்டும் என்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி சுதர்ஷன குணவர்தன தெரவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப் பின்னர் ஊடகங்களுக்கு பணிப்பாளர் நாயகம் சுதர்ஷன குணவர்தன இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள ஊடக சுட்டிக்காட்டல்களை நடைமுறைப் படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான பேச்சுவார்த்தை ஒன்று அரசாங்க ஊடக நிறுவனங்களின் முக்கியஸ்தர்களின் பங்களிப்புடன் தேர்தல் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவின் தலைமையில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது.



இதுதொடர்பாக பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி சுதர்ஷன குணவர்தன மேலும் தெரிவிக்கையில்,

"எமது நோக்கம் தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள ஊடக சுட்டிக்காட்டல்களைத் தேர்தல் காலங்களில் நடைமுறைப்படுத்தும் போது ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இதன்போது அரச தகவல் திணைக்களம், அரச ஊடக நிறுவனங்கள் இந்த ஊடகச் சுட்டிக்காட்டல்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சுதந்திர நீதியான தேர்தலுக்கு பங்களிப்புச் செய்வதற்கு நாம் அர்ப்பணித்துள்ளோம். அதனை நிறைவேற்றவும் நாம் எதிர்பார்த்துள்ளோம். அனைத்து ஊடகங்களும் இந்த சுட்டிக்காட்டல்களுக்கு அமைவாக செயற்பட்டு சுதந்திரமான தேர்தலுக்கும் நியாயமான தேர்தல் நடப்பதற்கும் ஒத்துழைப்பதற்கும் உறுதியெடுத்துள்ளோம்" என்று குறிப்பிட்டார். (அ)

## தாக்கியது யார்?



கொழும்பு, ஜன.06

மக்கள் விடுதலை முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் அசோக ரண்வல கைது செய்யப்பட்டுள்ளார்.

சப்புகஸ்கந்த பொலிஸ் நிலையத்தின் குற்றவியல் பிரிவு பொறுப்பதிகாரியை அச்சுறுத்திய காரணத்திற்காக அவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது.

எனினும்தமது பிரதேசத்தில் உள்ள இளைஞர் ஒருவரின் பிரச்சினை சம்பந்தமாக பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற தன்னைப் பொலிஸ் பொறுப்பதிகாரியே தாக்கினார் என்று மேல் மாகாண சபை உறுப்பினர் அசோக ரண்வல கூறினார்.

தாக்குதலில் காயமடைந்துள்ள அவர் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளார். (அ)

## சிறு ஏற்றுமதிப் பயிர்களால் 40 கோடி ரூபா வருமானம்



கொழும்பு, ஜன.06

வாசனைத் திரவிய உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக அறிமுகம் செய்யப்பட்ட சுற்றாடல் பசுமைக் கிராம வேலைத்திட்டம் நல்ல பலனைத் தந்திருப்பதாக விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு சிறு ஏற்றுமதிப் பயிர் விற்பனையின் மூலம் 40 கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளதாகத் திணைக்களத்தின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தில் ஆயிரம் விவசாயிகள் இணைந்துள்ளனர். இதன்கீழ் விவசாயிகளுக்கு தேவையான உள்ளீடுகளைப் பெறுவதற்கு தலா மூவாயிரம் ரூபா வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# பளையில் எறிகணைகள் மீட்பு

கிளிநொச்சி,ஜன.06


கிளிநொச்சி, பளை பிரதேசத்தில் நேற்று வெள்ளிக் கிழமை ஒருதொகை மோட்டார் எறிகணைகள் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

"பொதுமகன் ஒருவர் தனக்குச் சொந்தமான காணியில் குழியொன்றைத் தோண்டினார். அதன்போதே மோட்டார் எறிகணைகள் கண்டு பிடிக்கப்பட்டன. காணி உரிமையாளர் வழங்கிய தகவலின் பேரில் அங்கு வந்த பொலிஸார் எறி கணைகளை மீட்டனர்.

76 எம்.எம் மற்றும் 81 எம்.எம். என்று மோட் டார் எறிகணைகளில் அடையாளமிடப்பட்டுள் ளன. போர் காலத்தின்போது விடுதலைப் புலிகள் பயன்படுத்த வைத்திருந்த எறிகணைகளாக அவை இருக்கவேண்டும்" என்று பொலிஸார் கூறினர்.

கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற அனுமதியைப் பெற்றபின் மீட்கப்பட்ட சிறப்பு அதிரடிப் படையி னரால் மோட்டார் எறிகணைகள் செயலிழக்கச் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.(அ)

## இன்றைய கேலிச்சித்திரம்




# ஜப்பான் உதவ ரெடி!

கொழும்பு, ஜன.06

"அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தை நோக்கிய பயணத்தில் இலங்கைக்கு ஜப்பான் முழுமையாக உதவத் தயார் "என்று ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் தாரோ கோனோ தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற் கொண்டு இலங்கை வந்திருக்கும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் தாரோ கோனோ நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவைச் சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையில் சிறந்த வர்த்தக உறவுகள் பேணப்பட்டுவருவதாகக் குறிப்பிட்ட ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் இலங்கை யில் வர்த்தக மற்றும் முதலீட்டு சந்தர்ப்பங்கள் குறித்து மேலும் கண்டறிய விசேட தூதுக்குழு வொன்றை இம்மாதம் இறுதியில் இலங்கைக்கு அனுப்பவுள்ளதாகவும் தெரிவித்தார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன, ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் கெனிசி சுகானுமா ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)



### சாரதியைத் தாக்கினர் பொலிஸார்:

# இ.போ.சவினர் மீண்டும் போராட்டம்

வவுனியா, ஜன. 06

இ.போ.சவினரின் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நேற்று ம்முடிவுக்கு வந்தது டன் கடமைகளுக்கும் திரும்பியிருந்தனர்.

இந்நிலையில் வவு னியா புதிய பஸ் நிலையத் தில் நேற்று இ.போ.சவின ருக்கும் தனியார் புஸ்ஸி னருக்கும் இடையே முறு கல் ஏற்பட்டது.

இதில் தலையிட்ட பொலிஸார் அவர்களை சமாதானப்படுத்த முற் பட்டபோது இ.போ.ச. சாரதியை தாக்கினர் எனக் கூறப்படுகின்றது. இதில் பாதிக்கப்பட்ட ஏ.எம். இர்ஷாட் (வயது 30) என் பவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதையடுத்து வவு னியா இ.போ.ச. பணியா ளர்கள் நேற்று மீண்டும் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் குதித்த னர். எனினும் சமாதானப் பேச்சுகளைத் தொடர்ந்து பணிப் புறக்கணிப்பு கைவிடப் பட்டு மீண்டும் சேவையில் ஈடுபட்டனர். (ச)

# வேட்பாளர்களுக்கு நாணயக் கயிறு

## இறுக்கமான விதிகள் அறிவிப்பு

கொழும்பு, ஜன.06

உள்ளூராட்சி மன்றத் தேர்த லில் சுவரொட்டிகள், பெனர், கட்அவுட் போன்றவற்றை தேர்தல் பரப்புரைக் கூட்டங் களின் போது மட்டும் காட்சிப் படுத்தலாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித் தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர்கள் சந்திப் பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"சட்டவிரோதமாகக் காட்சிப் படுத்தப்படும் சுவரொட்டிகள், பனர் மற்றும் கட்அவுட்டுக் களை அப்புறப்படுத்துவது வதைத் தவிர வேறு மாற்றுத் தீர்வுகள் இல்லை. இதுவிடயம் தொடர்பில் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம்.

உள்ளூராட்சி மன்றத் தேர் தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் தமது சொத்து விவரங்களை கையளிக்க வேண்டும் . அவ்வாறு சொத்து விவரங்களைச் சமர்ப்பிக்காத வேட்பாளர்களின் அரசியல் அலுவலகங்களை அப்புறப் படுத்த நடவடிக்கை எடுக்கப் படும்" என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய மேலும் கூறினார். (அ)

# தொடர்ச்சிகள்

### 17,273 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் ஆணையாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பித்தவர்களில், 17 ஆயிரத்து 273 பேர் தகுதி பெற்றுள்ளனர். தபால் மூல வாக் காளர்கள் எதிர்வரும் 22 ஆம் மற்றும் 25, 26 ஆம் திகதிகளில் தமது வாக்குகளை அளிக்கமுடியும்.

22 ஆம் திகதி தேர்தல் திணைக்களம், மாவட்ட செயலகம் மற்றும் பொலிஸ் நிலை யங்களினதும், 25 மற்றும் 26 ஆம் திகதிக ளில் ஏனைய அரச அலுவலகங்கள், கல்வி அலுவலகங்கள், பாடசாலைகள், போக்கு வரத்துச் சபை டிப்போக்கள், பாதுகாப்பு படை முகாம்கள் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களின் தபால் மூல வாக்காளர்கள் தமது வாக்குகளை அளிக்க முடியுமென்றும் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணை யாளர் அலுவக் தகவல்கள் தெரிவிக் கின்றன., (ச)

### புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்காக ஒரு கோடியே 53 இலட்சம் அமெ ரிக்க டொலர்களை சேகரித்துள்ளனர்.

இவர்களுக்கு எதிராக, மோசடி, போலி ஆவணப்படுத்தல், பணம் பறித்தல் ஆகிய குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள் ளன. சுவிற்சர்லாந்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத இயக்கமாக அறிவிக்கப்படாமையால் அந்த இயக்கத்துக்கு நிதி வழங்கியதன் பேரில் சந்தேகநபர்கள் மீது எந்தவித நடவடிக்கை யும் எடுக்கப்படாது. எனினும் பொய்யான ஆவணங்கள் மற்றும் பயமுறுத்தல்கள் மூலம் பணம் திரட்டிய குற்றச்சாட்டுக் களின் கீழ் தண்டனை வழங்கப்பட முடி யும். இவ்வாறு பெறப்பட்ட நிதி சிங்கப்பூர், டுபாய் வழியாக தமிழீழ விடுதலைப் புலி கள் இயக்க்த்துக்குச் சென்று சேர்ந்துள்ளன. அவற்றை ஆயுதங்கள் வாங்க விடுதலைப் புலிகள் பயன்படுத்தியுள்ளனர்" என்றும் கூறப்படுகின்றது. (ச)

### பூநகரி விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்தில் உயிரிழந்தவரின் மரணத்துக் காரணம் எனக் கூறப்படும் லொறி சாரதியைக் கைது செய்யுமாறு இறந்தவரின் உறவுகள் பொலிஸாருடன் வாதிட்டனர்.

ஆனால் போதுமான சாட்சியம் இல்லாமல் கைது செய்ய முடியாது எனப் பொலிஸார் கூறினர். இதனால் இரு சாரா ருக்கும் இடையே பலத்த வாய்த் தர்க்கம் ஏற்பட்டது.

எனினும் விபத்தை நேரில் பார்த்த ஒருவர் சாட்சியமளிக்கத் தயார் எனக் கூறி யதை அடுத்து லொறியின் சாரதி கைது செய்யப்பட்டார். அவரை கிளிநொச்சி நீதி மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப் படும் எனத் தெரிவித்த பொலிஸார் மேல திக விசாரணைகளைத் தொடர்ந்து வருகின் றனர். (ச)

### மடு தேவாலயம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிற்றுண்டிச் சாலை ஒன்றை நடத்தி வருகின் றனர். அதன் அருகே அரச மரம் ஒன்றை நட்டுப் பராமரித்து வரும் அவர்கள், அதன் கீழ் புத்தர் சிலையை வைத்து புத்த கோவில் ஒன்றையும் நிர்மாணிக்க முயற்சிக்கின்றனர்.

இந்தச் செயலை ஒருபோதும் நாம் அனுமதிக்க முடியாது. அப்படி நடந்தால் அது மடு தேவாலயத்துக்கு செய்யும் மிகப் பெரிய அவமரியாதையாக இருக்கும். மேலும் வடக்கில் பல இடங்களில் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டு வழிபாடுகளில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர். இந்தச் சிலைகளை அகற்ற முயற்சிக்கும்போது அது தேசிய பிரச்சினையாக வெடிக்கிறது. எனவே அங்கு புத்தர் சிலையை வைக்க முன்னமே தடுத்து நிறுத் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த அமைப்புகள் தங்களின் கடிதத்தில் கோரியுள்ளன.

இதேவேளை, மடு தேவாலயத்தின் அருகே புத்தர் சிலை வைக்கவோ, புத்த விகாரை அமைக்கவோ எந்த நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை. அவ்வாறான எண்ணம்கூட இராணுவத்திற்கு இல்லை என வன்னி கூட்டுப்படைகளின் தலை மையகம் தெரிவித்துள்ளது. (ச)

### வைரஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர் கள் முள்ளியவளை தண்ணீரூற்றுப் பகுதி யைச் சேர்ந்தவர்கள். இதேபோன்று இறந்த வர்களிலும் இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களே அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

### வெளியாகட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு அது குறித்த அறிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித் தது. இதையடுத்து ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அவ்வறிக்கையின் பரிந்துரை களின் பிரகாரம் தனது விசேட அறிவிப்பை விடுத்திருந்தார்.

அந்த அறிவிப்பில் முன்னாள் நிதி அமைச் சர் ரவிகருணாநாயக்கவும் பொறுப்புக் கூற வேண்டியவர்களுள் ஒருவராக காணப்படு வதாக அறிக்கை பரிந்துரைப்பதாகவும், குற்றவியில் மற்றும் சிவில் சட்ட நடவடிக் கைகளை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்படுவ தாகவும் குறிப்பிட்டிருந்தார்.

நான் நிதி அமைச்சராக பதவி வகித்திருந் தேன். என்து நிர்வாகக் கட்டமைப்பிற்குள் இலங்கை மத்திய வங்கியோ அரச வங்கி களோ காணப்படவில்லை.

அவ்வாறிருக்கையில் நான் எவ்வாறு பிணை முறிகள் விற்பனை விடயத்தில் குற்றவாளி யாக அடையாளம் காணப்பட்டேன் என்பதை புரிந்துகொள்ள முடியாதுள்ளது. ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கமான தும் அதற்குரிய பதிலை வழங்குதற்கு தயாரா கவுள்ளேன். அதற்கான தயார்ப்படுத்தல் களில் ஈடுபட்டுள்ளேன் என்றார். (ச)

### விக்னேஸ்வரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் சுமந்திரனை சந்தித்துப் பேசியிருந்தனர். அவரின் அழைப்பின் பேரிலேயே நேற்று அவர்கள் யாழ்ப்பா ணம் வந்தனர். இதனால் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்திக்க விடாது அவர் தடுத்திருக்கலாம் அல்லது அவரின் அழைப்பின் பேரில் வந்ததால் நாடாளு மன்ற உறுப்பினர் குழு தவிர்த்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு இடையிலான முரண் நிலையே இச்சந்திப்பு தடுக்கப்பட அல்லது தவிர்க்கப்படக் கார ணம் எனக் கூறப்பட்டபோதும் உரிய த்ரப் புகள் இது குறித்து பதிலேதும் தெரிவிக்க வில்லை. (ச)

### வேட்பாளர்...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப் பிரிய கூறினார்.

தேர்தல் ஆணைக்குழுவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பி லேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆலயங்களில் வேட்பாளர்கள் சார்பாக மத நிகழ்வுகள் இடம்பெற்றால் அல்லது தேர்தல் அறிக்கைகள் வெளியிடப்பட்டால் வேட்பாளர்களுக்கு எதிராக மாத்திரமன்று அந்த ஆலயக் குருக்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆணைக்குழு தலைவர் மேலும் தெரிவித்தார்.(ச)

## மோடிக்குப் பரிசு



இஸ்ரேல், ஜன.06

தமது இந்திய சுற்றுப் பயணத்தின்போது, பிரதமர் நரேந்திர மோடிக்கு கடல் நீரை குடிநீராக்கும் வாகனத்தை பரிசாக வழங்க இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு திட்டமிட்டுள்ளார்.

இஸ்ரேலுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஆண்டு ஜூலை மாதம் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அப்போது, அங்குள்ள ஓல்கா கடற்கரையில் அமைந்துள்ள கடல் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை அந்நாட்டுப் பிரதமர் நெதன்யாகுவுடன் இணைந்து நரேந்திர மோடி பார்வையிட்டார். கடல் நீரை குடிநீராக்கும் ஜீப்பில் பயணம் செய்தபடியே, அவர்கள் அந்தச் சுத்திகரிப்பு நிலையத்தை பார்வையிட்டனர்.

இந்த வாகனத்தால் பெரிதும் ஈர்க்கப்பட்ட நரேந்திர மோடி, அதுகுறித்து நெதன்யாகுவிடம் ஆர்வத்துடன் கேட்டறிந்தார். சிறிய ரக ஜீப் போன்ற வடிவமைப்புடன் இருக்கும் இந்த வாகனமானது, நாளொன்றுக்கு 20 ஆயிரம் லீற்றர் கடல் நீரை மிகவும் தூய்மையான குடிநீராகச் சுத்திகரிப்பு செய்யும் திறன் படைத்தது.

தமது இஸ்ரேல் சுற்றுப்பயணத்துக்குப் பின்னர் இந்தியா திரும்பிய பிரதமர் மோடி, இந்த சுத்திகரிப்பு வாகனத்தின் தொழில்நுட்பம் குறித்து தமது ருவிட்டர் பக்கத்தில் புகழ்ந்து பதிவிட்டிருந்தார்.

இந்த நிலையில், இந்தியாவிற்கு ஜனவரி 14 ஆம் திகதி பயணம் மேற்கொள்ளவுள்ள இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, நரேந்திர மோடிக்கு அந்த வாகனத்தைப் பரிசாக வழங்க திட்டமிட்டுள்ளதாக அந்த நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ)



# தமிழகத்தில் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதம்

சென்னை, ஜன.06

புதிய ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாததைத் தொடர்ந்து போக்குவரத்துத் தொழிலாளர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால், தமிழகம் முழுவதும் பரவலாக பஸ் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

அலுவலகம் செல்வோர், பள்ளி, கல்லூரிக்கு செல்லும் மாணவ, மாணவியர், வெளியூர் செல்வோர் என மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் சில நாட்களில் பொங்கல் பண்டிகைக்காக வெளியூர் செல்ல திட்டமிட்டிருக்கும் மக்கள் அனைவரும் இந்த திடீர் வேலைநிறுத்த அறிவிப்பால் கலக்கத்தில் உள்ளனர்.

மக்களின் அவசரத்தைப் பயன்படுத்திக் கொண்டு தனியார் பஸ்களும், வாடகைக்கார்களும், ஓட்டோ ஓட்டுநர்களும் இரு மடங்கு கட்டணம் வசூலிப்பதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

பிரச்சினை வலுத்துவரும் நிலையில், போக்குவரத்து ஊழியர்கள் வேலைநிறுத்தம் தொடர்பாக முதல்வர் பழனிச்சாமி ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார். (இ)

## கொரியாக்கள் சமாதானம்?





சியோல், ஜன.06

தென்கொரியாவின் பேச்சு வார்த்தை அழைப்பை வடகொரியா ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவுடனான வருடாந்தக் கூட்டு இராணுவப் பயிற்சி நடைபெறுவதற்கு தாமதமாவதைத் தொடர்ந்து தென்கொரியா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இது குறித்து தென்கொரியாவின் ஒருங்கிணைப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் பைக் டேஹூன் கூறும்போது, இந்தப் பேச்சு வார்த்தையில் குளிர்கால ஒலிம்பிக் மற்றும் இரு நாடுகளுக்கு இடையே நிலவும் இதர பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்கப்படும் என்று கூறியுள்ளார்.

தென் கொரியாவின் இந்தப் பேச்சுப் வார்த்தை அழைப்பை வடகொரியா நேற்று வெள்ளிக்கிழமை ஏற்றுக் கொண்டுள்ளது.

வடகொரியா - தென்கொரியா இடையேயான சந்திப்பு அடுத்தவாரம் செவ்வாய்க்கிழமை நிகழும் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடகொரியாவின் இந்தத் திடீர் மாற்றம் அமெரிக்கா - தென்கொரியா இடையே விரிசலை ஏற்படுத்துவதற்கான நகர்வு என்று அரசியல் வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (இ)

## போயஸ்கார்டனில் சோதனை


சென்னை, ஜன.06

கடந்த நவம்பர் மாதம் சசிகலா உறவினர்களுக்கு சொந்தமான 187 இடங்களில் வருமான வரித்துறை சோதனை நடத்தியுள்ளது.

இதைத் தொடர்ந்து, ஜெயலலிதாவின் வேதா நிலையத்திலும் சோதனை நடத்தப்பட்டது. இந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை போயஸ்தோட்டம் வேதா நிலையத்துக்கு அருகில் சசிகலாவுக்கு சொந்தமான கட்டடத்தில் உள்ள சசிகலா அறையில் வருமான வரித் துறையினர் சோதனை நடத்தினர். 2 மணி நேரம் நடந்த இந்த சோதனையில் சிக்கியவை தொடர்பான விவரங்களை வருமானவரித் துறையினர் வெளியிடவில்லை. (இ)



## கமலுக்குப் பாதுகாப்பு




சென்னை, ஜன.06

சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள நடிகர் கமல்ஹாசன் வீட்டுக்கு, பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

கமல்ஹாசன், மத்திய அரசையும் மாநில அரசையும் தொடர்ந்து விமர்சித்து வருகிறார். ஆனந்த விகடன் இதழில், 'என்னுள் மையம் கொண்ட புயல்' தொடர் எழுதி வரும் கமல், இந்த வாரம் ஆர்.கே.நகர் தேர்தல் குறித்தும் அதன் வெற்றி குறித்தும் தன் கருத்துகளைப் பகிர்ந்திருந்தார். ஆளும் தரப்பும், சுயேச்சையாகப் போட்டியிட்ட டி.டி.வி.தினகரன் தரப்பும் அதிக அளவில் பணம் கொடுத்திருப்பதாகக் கமல் சுட்டிக் காட்டியிருந்தார். கமலின் கருத்துக்கு தினகரன் எதிர்வினையாற்றினார். இந்தச் சூழலில், சென்னையில் உள்ள கமலின் வீட்டை இந்து பாதுகாப்புக் கட்சியினர் முற்றுகையிடப் போவதாகத் தகவல் வெளியானது. இதையடுத்து, சென்னையில் உள்ள கமலின் வீட்டுக்கு,நேற்றுக் காலை முதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. (இ)

# கருணாநிதியை அரசியலுக்கு பயன்படுத்தினாரா ரஜினி?



சென்னை, ஜன.06

திமுக தலைவர் கருணாநிதியுடனான சந்திப்பை நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு பயன்படுத்தியதாக திமுகவினர், வேதனை தெரிவித்துள்ளனர்.

தனிக்கட்சி தொடங்கி 234 தொகுதிகளிலும் போட்டியிடப் போவதாக கடந்த 31ஆம் திகதி ரஜினி அறிவித்தார். ரஜினியின் அரசியல் வருகைக்கு ஆதரவும், எதிர்ப்பும் எழுந்துள்ளன. குறிப்பாக திமுக வினரும், தமிழ்த் தேசியம் பேசுவோரும் அவரை கடுமையாக எதிர்த்து வருகின்றனர். இந்நிலையில் கடந்த புதன்கிழமை இரவு திமுக தலைவர் கருணாநிதியை ரஜினி சந்தித்தார்.

தனிக் கட்சி தொடங்குவதாக அறிவித்த பிறகு கருணாநிதியை ரஜினி சந்தித்தது தமிழக அரசியலில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியுள்ளது. சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ரஜினி, "கருணாநிதியை சந்தித்து உடல்நலம் விசாரித்ததுடன், புத்தாண்டு வாழ்த்து தெரிவித்தேன். தனிக் கட்சி தொடங்குவதற்காக ஆசி பெற்றேன்" என்று கூறினார். இது திமுகவினரிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக திமுக முக்கியத் தலைவர் ஒருவரிடம் கேட்டபோது, "உடல்நலக் குறைவால் ஓய்வெடுத்து வரும் கருணாநிதியை மாற்றுக் கட்சித் தலைவர்கள் உள்பட பலரும் சந்தித்து வருகின்றனர். அந்த அடிப்படையில் ரஜினி கேட்டதும் நேரம் ஒதுக்கப்பட்டது. உடல்நலம் விசாரித்துவிட்டு திரும்பி விடுவேன் என்றுதான் அவர் ஸ்டாலினிடம் கூறியிருந்தார். ஆனால், அதற்கு நேர்மாறாக மரியாதை நிமித்தமான இந்தச் சந்திப்பை தனது அரசியலுக்கு பயன்படுத்தும் வகையில் அரசியல் பிரவேசத்துக்கு வாழ்த்துப் பெற்றேன் எனக் கூறியது வேதனை அளிக்கிறது. ரஜினியிடம் இதனை எதிர்பார்க்கவில்லை" என்றார். (இ)

# அவுஸ்திரேலிய ஓபன்: செரீனா அவுட்!




அமெரிக்கா, ஜன. 06

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் செரீனா வில்லியம்ஸ் பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க முன்னணி டென்னிஸ் வீராங்கனையான செரீனா வில்லியம்ஸூக்கும், அமெரிக்க தொழிலதிபர் அலெக்சிஸ் ஒஹானியனுக்கும் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் பெண் குழந்தை பிறந்தது. கடந்த ஆண்டு அவுஸ்திரேலிய ஓபன் போட்டியில் வெற்றி பெற்ற செரீனா அதன் பின் போட்டிகளில் கலந்து கொள்ளாமல் இருந்தார்.

குழந்தை பிறந்த பிறகு முதல் முறையாக கடந்த வாரம் அபுதாபியில் நடைபெற்ற போட்டியில் கலந்து கொண்ட செரீனா, அவுஸ்திரேலியா ஓபன் போட்டியிலும் விளையாடுவார் எனக்கூறப்பட்டது. இந்நிலையில், செரீனா அவுஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் போட்டியிலிருந்து விலகப்போவதாக அறிவிப்பு வெளியிட்டார். தனக்கு ஓய்வு தேவைப்படுவதால் போட்டியிலிருந்து விலகுவதாகத் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியா ஓபன் போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை மெல்பேர்ண் நகரில் நடைபெற உள்ளது. இப்போட்டியிலிருந்து இங்கிலாந்தின் முன்னணி டென்னிஸ் வீரர் அண்டி முர்ரே மற்றும் ஜப்பானின் கெய் நிஷிகோரி ஆகியோரும் காயம் காரணமாக விலகியுள்ளனர். (ஐ)



# டில்லியில் பொண்டிங்

டில்லி, ஜன. 06

ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கும் டில்லி அணியின் பயிற்சியாளராக அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித்தலைவரான பொண்டிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், 2015, 2016ஆம் ஆண்டுகளில் மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்சியாளராகப் பணிபுரிந்த நிலையில், தற்போது டில்லி அணியுடன் இணைந்துள்ளார். (ஐ)

# சென். ஜோன்ஸ் ஆதிக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 06

சிங்கர் 19 வயதுக்குரியவர்களுக்கான பிரிவு 2 கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது நாள் ஆட்டத்தில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி ஆதிக்கம் செலுத்துகிறது.

இரண்டு நாட்களைக் கொண்ட இந்தப் போட்டி நேற்று யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பித்தது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி, 60 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 272 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

அந்த அணி சார்பாக ஜதுசன் 106 ஓட்டங்களைச் சேர்த்து அணிக்குப் பெரும் பலமாக விளங்கினார்.

பின்னர் தனது ஆட்டத்தை ஆரம்பித்த பதுக்க சிறி பியரதன மகா வித்தியாலய அணி, நேற்று ஆட்ட நேரம் முடியும்போது 90 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டகளை இழந்திருந்தது. (ஐ)



# நவஜீவன்ஸ் வெற்றி

உடுப்பிட்டி, ஜன. 06

ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி நவஜீவனஸ் விளையாட்டுக் கழக லீக் சுற்றில் முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

நவிண்டில் நாச்சிமார்.கோவிலடி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்டத் தொடரின் லீக் சுற்றுப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

அதில், நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் மோதியது. ஆட்டத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த நவஜீவனஸ் அணி, 5:0 என்ற கோல் கணக்கில் முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகமும், கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதின. பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணியினரும் சம பலத்துடன் மோதின. இறுதியில் 1:1 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்து. (ஐ-66)



# கேப்டவுணில் பந்துவீச்சாளர்கள் கைவரிசை!

கேப்டவுண், ஜன. 06

இந்திய- தென்னாபிக்க அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி, பந்து வீச்சாளர்களின் கைக்குள் சென்றுள்ளது. முதல் நாளிலேயே மொத்தம் 13 விக்கெட்டுகள் சாய்க்கப்பட்டுள்ளன.

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி, இலங்கை நேரப்படி நேற்று மதியம் 2 மணிக்கு கேப் டவுணில் ஆரம்பித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, தனது முதல் இன்னிங்ஸிற்காக 289 ஓட்டங்களுள் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

அந்த அணி சார்பாக துடுப்பாட்டத்தில்; எ.பி.டி. வில்லியர்ஸ் (65), டு பிளெஸிஸ் (62), டி கொக் (43), பிளிண்டனர் (23), மஹாராஜ் (35) ஆகியோர் ஓரளவு சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்திருந்தனர்.

இந்தியாவின் பந்துவீச்சில், புவனேஸ்வர் குமார் 4 விக்கெட்டுகளைச் சாய்க்க, அஸ்வின் 2 விக்கெட்டுகளைத் தனது பங்குக்குப் பிடுங்க, எஞ்சிய விக்கெட்டுகளை சமி, பும்ரா, பாண்டியா ஆகியோர் தலா ஒன்று வீதம் பிடுங்கினர்.

பின்னர், தனது இன்னிங்ஸை ஆடிய இந்திய அணி, முரளி விஜய் (1), தவான் (16), கோஹ்லி (5) ஆகியோர் அடுத்தடுத்து வெளியேற, நேற்று முதல் நாள் ஆட்ட நேரம் முடியும் போது 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 28 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் தடுமாற்றத்துடன் காணப்பட்டது.

களத்தில் புஜாரா (5), ரோஹித் சர்மா (0) ஆகியோர் களத்தில் நின்றனர்.

இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாள் ஆகும். (ஐ)

# இன்றைய ஆட்டங்கள்

சமரபாகு, ஜன. 06

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் லீக் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை முதல் குறித்த மைதானத்தில் மின்னொளியில் நடைபெறபெறவுள்ளன.

இன்று இரவு 7 மணிக்கு நடைபெறும் முதலாவது போட்டியில் கம்பர்மலை யங் கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக பி அணியும, 8 மணிக்கு நடைபெறும் இரண்டாவது ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக ஏ அணியும் மோதவுள்ளன. (ஐ-66)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 06.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.